**<u>DEPOSITION OF WITNESS</u>**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 16 /2024**
**Prosecution Witness - PW2**

| | |
|---|---|
| Name | : ராதாகிருஷ்ணன் |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.06.2026.
(A1 A4 A6 and A7 are present. A2 and A3 are absent. Petition U/s.355 BNSS are filed and allowed).

**<u>முதல் விசாரணை</u>–**

நான் செட்டியார் விளாகம் பனங்கால் முக்கில் வசிக்கிறேன். நான் நிறுவனத்தில் நான் நிறுவனத்தில் அக்கவுண்ட்டாக வேலை பார்க்கிறேன். 21 5 2022 அன்று வீட்டில் இருந்து கிளம்பி என் மகன் ஏழாம் வகுப்பு படிக்கிறார் அவரை என் அத்தை வீட்டில் 8.45 மணிக்கு விட்டுவிட்டு நாங்கள் வேலைக்கு கிளம்பினோம் நானும் என் மனைவியும் ரேணுகாவும் வேலைக்கு கிளம்பினோம் கருங்கல் வழியாக திக்கணம் மேக்கோடு தாண்டும்போது என்னுடைய இருசக்கர வாகனம் TN 75 Y 81 66 வாகனத்தில் சென்றோம். மேக்கோடு சுடலை மாடன் கோயில் அருகே செல்லும் பொழுது என்னுடைய வாகனத்திற்கு முன்பு ஒரு இருசக்கர வாகனமும் பின்பு ஒரு இருசக்கர வாகனமும் வந்தது சுடலைமாடன் கோயில் அருகே வரும்பொழுது ஸ்பெலெண்டர் வாகனம் முன்னாள் விளைகிறது யூனிகான் வாகனம் பின்னால் விளைகிறது அப்போது உதைத்து கீழே தள்ளினார்கள் .ஸ்ப்ளெண்டர் வாகனத்தில் வந்தவர்களில் பின்னாடி அமர்ந்திருந்தவர்கள் வயிற்றில் இருந்த கம்பியை எடுத்து தலையில் அடிக்க முயற்சி செய்தபோது நான் வலது கையால் தடுத்தேன் அப்பொழுது எனக்கு வலது கையில் அடிபட்டது எலும்பு முறிவு ஏற்பட்டது கீழே கிடக்கும் பொழுது அடுத்ததாக வலது காலிலும் அடித்தார்கள் வலது காலிலும் முறிவு ஏற்பட்டது.

அதன் பிறகு கெட்ட வார்த்தையில் பேசினார்கள். நான் மயக்க நிலை அடைந்தேன் என் மனைவிக்கு கீழே விழுந்ததில் பின்புறம் அடிபட்டு இருந்தது. என் மனைவியும் அந்த ஊரில் உள்ள நபர்களும் சேர்ந்து என்னை 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனை அனுப்பி வைத்தார்கள் .மருத்துவமனையில் வலது கை மற்றும் வலது காலில் அறுவை சிகிச்சை செய்தார்கள்.ஆஜர் எதிரிகளில் பைக்கில் வந்தவர்களை அடையாளம் காட்ட முடியுமா என்றால் வெள்ளை நிற சட்டை அணிந்த நபர் Splendor வாகனத்தை ஓட்டி வந்தார் என்று சாட்டி அடையாளம் காட்டுகிறார். அந்த வாகத்திலே பின்னால் அமர்ந்திருந்த நபர் சிவப்பு கலர் பணியன் அணிந்திருந்த ஆஜர் எதிரி என்று கூறுகிறார். இதற ஆஜர் எதிரிகள் இருவரும் unicorn பைக்கில் வந்தார்கள் என்று கூறுகிறார். போலீஸ் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் 1 முதல் 4 வரை குறுக்கு விசாரணை

எந்த வாகனத்தில் வந்தவர்கள் என்னை உதைத்து தள்ளினார்கள் என்றால் Splendor வாகனத்தில் வந்தவர்கள். எனக்கு கை மற்றும் கால்களில் காயம் ஏற்படுத்தியவர்கள் Splendor வாகனத்தில் வந்தவர்களா என்றால் ஆமாம்.ஆஜர் எதிரிகளை சம்பவம் நடந்ததற்கு முன்பு எனக்கு தெரியாது என்றால் ஆமாம். நான் மயக்க நிலையில் இருந்து இயல்பு நிலைக்கு எப்பொழுது திரும்பினேன் என்றால் மறுநாள் காலையில் திரும்பினேன். எனக்கு ஏற்பட்ட காயத்தினால் எவ்வளவு நாள் படுக்கையில் இருந்தேன் என்றால் மருத்துவமனையில் ஐந்து நாள் இருந்தேன் மூன்று மாதங்களாக வீட்டில் இருந்தேன்.யூனிகான் வாகனத்தில் வந்தவர்கள் யாரும் என்னை தாக்கவில்லை என்றால் தாக்கவில்லை ஆனால் சுத்தி நின்றார்கள்.யூனிகான் வாகனத்தில் வந்தவர்கள் எங்களை தாக்கவில்லை என்றும் சுத்தி நின்றார்கள் என்றும் போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன் .இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ள அனீஸ்,சுரேஷ்,மோனிஷ்,அசின் ஆகியோர்கள் என்னுடைய நண்பர்களா என்றால் இல்லை ஆனால் அவர்கள் என் ஊரைச் சார்ந்தவர்கள்.எனக்கு சுயநினைவு திரும்பிய பிறகு என் நண்பர்கள் யாராவது வந்து பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள்.என் நண்பர்கள் எல்லாம் தேங்காய்

பட்டினத்தில் உள்ள இந்து சமய நல்லிணக்க கூட்டங்களில் கலந்து கொள்பவர்கள் என்றால் இல்லை. இந்த வழக்கு தொடர்பாக பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த ராதாகிருஷ்ணன் என்பவரும், அப்போதைய நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் M.R.காந்தி என்பவரும் எங்கள் பகுதியை சார்ந்த பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த மாவட்ட தலைவர் தர்மராஜ் என்பவரின் தூண்டுதல் பெயரில் தான் இந்த வழக்கை பொய்யாக கொடுத்தேன் என்றால் இல்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் எல்லாம் நான் இருசக்கர வாகனங்களில் செல்லும் பொழுது கீழே விழுந்ததால் ஏற்பட்டது என்றாலும் நான் வழக்கில் சொல்வது போல் எதிரிகள் தாக்கி ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. போலீஸ் விசாரணையில் யார் யார் தலைக்கவசம் அணிந்திருந்தார்கள் என்றும் யார் யார் முக கவசம் அணிந்திருந்தார்கள் என்றும் சொல்லவில்லை என்றால் சொல்லி இருக்கிறேன். யூனிகான் வாகனத்தை ஓட்டி வந்த சாகுல் அமீதும் அதற்கு பின்னால் அமர்ந்திருந்த முகமது அலி கூத் என்பவர் முக கவசம் அணிந்து இருந்தார்.Splendor வாகனத்தில் வந்தவர்களில் பயாஸ் தலைக்கவசம் அணிந்திருந்தார் சமீது முக கவசம் அணிந்திருந்தார். இந்த விவரங்களை போலீஸ் விசாரணையில் சொல்லி இருக்கிறேன் என்றால் சொல்லி இருக்கிறேன். நான் சொல்வது போல் அவர்கள் தலைக்கவசம் முக கவசம் அணியவில்லை என்றாலும் என்னை சார்ந்த பார்ட்டி நபர்கள் சொன்னதின் அடிப்படையில் பொய்யாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் இல்லை.

**சாட்சி விசாரணையின் போது சாட்சியால் வெள்ளைச்சட்டை அணிந்து இருந்த நபர் என்று அடையாளம் காட்டப்பட்டவர் பெயர் விசாரணையில் குறிப்பிடப்படவில்லை என்பதால் நீதிமன்றத்தால் வெள்ளை சட்டை அணிந்து இருந்த நபர் பெயர் என்ன கேட்கப்பட்டு அவர் பெயர் பயாஸ் என்று கூறினார்.**

<u>எதிரிகள் 6 மற்றும் 7 தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் மருத்துவமனையில் நினைவில்லாமல் இருந்த பிறகு எப்பொழுது நினைவு தெரிய வந்தது என்றால் அடுத்த நாள் காலை 9 மணிக்கு. மனைவி கொடுத்த புகார் எப்படி தெரியும் என்றால் அவர் சொல்லி தான் எனக்கு

தெரியும்.மனைவி புகார் கொடுக்கும் பொழுது நான் உடன் இல்லை அவர் புகாரில் உள்ள விவரங்கள் எல்லாம் எனக்கு பிறகு தான் தெரியும். எனக்கு என் மனைவி கொடுத்த புகாரின் சங்கதி என் மனைவி சொல்லி தான் தெரியும். ஆஜர் எதிரிகளை முதன் முதலில் எப்போது பார்த்தேன் என்றால் அவர்கள் காவல் நிலையத்தில் கையெழுத்து போட வரும் பொழுது பார்த்தேன். காவல் நிலையத்திற்கு நான் எதற்காக சென்றிருந்தேன் என்றால் நான் செல்லவில்லை என் மனைவி சென்றிருந்தார் அவர் சொல்லி தான் எனக்கு தெரியும்.மனைவி புகார் கொடுத்து இருக்கிறார் என்றாலும் அவர் சொல்லி தான் எனக்கு விவரங்கள் எல்லாம் தெரியும் என்றாலும் ஆமாம். போலீஸ் விசாரணையிலும் மனைவி சொல்லி தான் தெரியும் என்று சொல்லி இருக்கிறேன் என்றால் ஆமாம். போலீஸ் என்னை மூன்று முறை விசாரித்தார்கள் மூன்று விசாரணையிலும் நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் நான் சொன்னேன் என்றால் ஆமாம்.போலீஸ் விசாரணையில் எந்த நபர்களையும் நிற்க வைத்து அடையாளம் காட்டினார்களா என்றால் இல்லை. நடக்காத சம்பவத்திற்கு எனது மனைவி கொடுத்த பொய்யான புகாருக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. என் மீது ஏதாவது குற்ற வழக்கு இருக்கிறதா என்றால் இல்லை. ஏதாவது வழக்கில் நான் புகார்தாரராக இருக்கிறேன் என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**